**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 569/2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW1-/PW1- |
| Name | : கங்காதரன் |
| Father/Husband's Name | : துரைசாமி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.02.2026.

Accused Present

**முதல் விசாரணை–**

நான் தற்போது மாமல்லபுரம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.09.2022 ம் தேதி பகல் 14.00 மணிக்கு ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் சங்கர் மற்றும் சதீஷ்குமார் தலைமை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக ஒழலூர், கிராமம் அம்பேத்கர் நகர் ஆகிய இடங்களில் கண்காணித்து சென்று போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், மாலை 14.00 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, ஒழலூர் மலைய டி வாரத்தில் அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் கார்த்திக் த.பெ.வேலு என்றும், அம்பேத்கார் நகர், ஒழலூர் கிராமத்தில் வசிப்பதாகவும் கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர்

உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி கார்த்திக் என்பவரை சோதனை செய்த போது, அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் பேக்கில் வைத்திருந்த எடை போட்டு பார்த்தபோது, 50 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 50 கிராம் அளவு கொண்ட உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், தலைமை காவலர் சதீஷ்குமார் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் **கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது** அது அ.த.சா ஆ 1 ஆக குறியீடுபடுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை -

சம்பா இடம் செல்வதற்கு முன்பு புது நாட்குறிப்பில் குறிப்பு வைத்து தான் சம்பவம் இடம் சென்றேனா என்றால் அவ்வாறு தான் சென்றேன். நான் பயன்படுத்தி வரும் பாக்டெயரிலும் எந்த இடத்துக்கு எப்பொழுது செல்கிறேன் என்பதை குறித்து குறிப்பு வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். சம்பவயிடம் சென்றபோது பொதுமக்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும் அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் அந்த சமயத்தில் பொதுமக்கள் இல்லை சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் நானும் உயர் அதிகாரிகள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் வைத்து போடவில்லை என்றாலும் எதிரிடமிருந்து எந்த பொருளும்

கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. முறையாக என் டி பி எஸ் வழக்கில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.